# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.34/2024 நாள் : 16.03.2024**

ரூ.9.99 கோடி மதிப்பீட்டில் அம்பத்தூர் மண்டலம், வார்டு-84, கொரட்டூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு 31-வது தெருவில் உள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 68-வது தெருவில் புதிதாக அமைக்கப்படவுள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, பாடி மேம்பாலத்தின் அருகிலுள்ள 500 மி.மீ விட்டமுடைய நெகிழிரும்பு குடிநீர் குழாயினை இணைக்கும் பணிகள்

ரூ.76.13 கோடி மதிப்பீட்டில் தேனாம்பேட்டை மண்டலம், ஆயிரம் விளக்கு பகுதியில் வார்டு-109, 110, 111, 112, 113, 118 மற்றும் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி பகுதியில் வார்டு-115, 116 மற்றும் 119 பகுதியில் கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள்

ரூ.6.60 கோடி மதிப்பீட்டில், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-131, கே.கே.நகர், டாக்டர் இராமசாமி சாலை, வார்டு-138, திருநகர், வார்டு-140, மேற்கு மாம்பலம் வாழைத்தோப்பு பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் வார்டு-131, 140 பகுதிகளில் கழிவுநீர் உந்துநிலையம் மற்றும் கழிவுநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள்

ரூ.3.48 கோடி மதிப்பீட்டில், பெருங்குடி மண்டலம், வார்டு-186, புழுதிவாக்கம், வேளச்சேரி-தாம்பரம் இணைப்பு சாலையிலுள்ள கைவேலி சந்திப்பிலிருந்து அன்னை தெரசா நகர் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை 450 மி.மீ விட்டமுடைய நெகிழிரும்பு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.9.99 கோடி மதிப்பீட்டில் அம்பத்தூர் மண்டலம், வார்டு-84, கொரட்டூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு 31-வது தெருவில் உள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 68-வது தெருவில் புதிதாக அமைக்கப்படவுள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, பாடி மேம்பாலத்தின் அருகிலுள்ள 500 மி.மீ விட்டமுடைய

நெகிழிரும்பு குடிநீர் குழாயினை இணைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கொரட்டூர் பகுதியில் 3.05 கி.மீ நீளத்திற்கு 500 மி.மீ விட்டமுடைய குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நாளொன்றுக்கு 10.20 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படும். இதன்மூலம், 50 ஆயிரம் பொதுமக்கள் பயனடைவர்.

ரூ.76.13 கோடி மதிப்பீட்டில் தேனாம்பேட்டை மண்டலம், ஆயிரம் விளக்கு பகுதியில் வார்டு-109 சூளைமேடு, வார்டு-110, 113 நுங்கம்பாக்கம், வார்டு-111 ஆயிரம் விளக்கு, வார்டு-112 கோடம்பாக்கம், வார்டு-118 கோபாலபுரம் மற்றும் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி பகுதியில் வார்டு-115, 116 திருவல்லிக்கேணி மற்றும் வார்டு-119 இராயப்பேட்டை பகுதிகளில் கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டது.

அதனடிப்படையில், ஆயிரம் விளக்கு, சூளைமேடு, நுங்கம்பாக்கம், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் பகுதிகளில் 42.27 கி.மீ நீளத்திற்கு 250, 300, 500 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் விரிவுபடுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 1,493 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 5 கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், மேற்கண்ட பகுதிகளில் உள்ள 50 ஆயிரம் பொதுமக்கள் பயனடைவர். மேலும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி பகுதியில் உசைன் நகர் மற்றும் கற்பக கன்னியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் 2.95 கி.மீ நீளத்திற்கு 300 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் பிரதான குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் சி.ஐ.டி காலனி முதல் குறுக்குத் தெருவில் புதிய கழிவுநீர் உந்துநிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 7 எண்ணிக்கையிலான

புதிய இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு 4,000 பொதுமக்கள் பயனடைவர்.

ரூ.6.60 கோடி மதிப்பீட்டில் கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-131, கே.கே.நகர், டாக்டர் இராமசாமி சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, வார்டு-138, திருநகர், கலைவாணர் தெருவில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மற்றும் அசோக்பில்லர் சாலை 60அடி சாலையில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் பணியாளர் குடியிருப்பு, வார்டு-140, மேற்கு மாம்பலம், வாழைத்தோப்பு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிகளில் 4 கி.மீ நீளத்திற்கு 100, 250 மி.மீ விட்டமுடைய குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் மாற்றியமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மேற்கண்ட பகுதிகளில் நாளொன்றுக்கு 0.97 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படும். இதன்மூலம், மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் 744 குடியிருப்புகளில் உள்ள 7 ஆயிரத்து 220 பொதுமக்கள் பயனடைவர்.

மேலும், ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் வார்டு-131, 140 பகுதிகளில் 2.52 கி.மீ நீளத்திற்கு 200 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் உந்து குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2 எண்ணிக்கையிலான கழிவுநீர் சேகரிப்பு கிணறுகள், 2 எண்ணிக்கையிலான கழிவுநீரகற்றும் நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 0.332 மில்லியன் லிட்டர் கழிவுநீர் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், 3 ஆயிரத்து 120 பொதுமக்கள் பயனடைவர்.

ரூ.3.48 கோடி மதிப்பீட்டில், பெருங்குடி மண்டலம், வார்டு-186, புழுதிவாக்கம், வேளச்சேரி-தாம்பரம் இணைப்பு சாலையிலுள்ள கைவேலி சந்திப்பிலிருந்து அன்னை தெரசா நகர் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை 1.8 கி.மீ நீளத்திற்கு 450 மி.மீ விட்டமுடைய நெகிழிரும்பு குடிநீர் பிரதான

குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 88 ஆயிரம் பொதுமக்கள் பயனடைவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater